# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2063/15 - 2018 මාර්තු මස 19 වැනි සඳුදා - 2018.03.19

*2063/15 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு**

மத்தியஸ்தர்களாக நியமிப்பதற்குப் பெயர் குறித்த நியமனங்களைக் கோரும் அறிவித்தல்

*1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவினால் தனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் பின்வரும் 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சாாந்த பிணக்குகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் ஆக்கப்படும் கட்டளைக்கு இணங்க காணிகளின் உடைமை அல்லது உரிமை தொடர்பான பிணக்குகளுக்கு தீர்வு காணும் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் பிரதேசங்களில் விசேட மத்தியஸ்த சபை (காணி) தொடர்பாக தவிசாளர்கள் மற்றும் மத்தியஸ்தர்களுக்காக பெயர் குறித்த நியமனங்கள் கோரப்படுகின்றன.*

**விசேட மத்தியஸ்த சபைப் பிரதேசம்**

*முல்லைத்தீவு மாவட்டம்*
*வவுனியா மாவட்டம்*
*மன்னார் மாவட்டம்*
*அம்பாறை மாவட்டம்*

*2. அந்த விசேட மத்தியஸ்த பிரதேசத்தின் மத்தியஸ்தர்களின் குழாத்துக்கு மத்தியஸ்தர்களை நியமிப்பதற்காக, பின்வரும் 02 (I) இன் கீழ் குறிப்பிடப்படும் தகைமையுடைய ஆட்களின் பெயர்களைச் சமர்ப்பிக்குமாறு இதனகத்துக் குறிப்பிடப்பட்டுள்ள 02 (II) இல் (அ) தனியாட்களையும் (ஆ) அரசியல் சார்பற்ற குழுக்களையும் ஒழுங்கமைப்புக்களையும் (இ) மாவட்டச் செயலாளர்களையும் பிரதேச செயலாளர்களையும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு இத்தால் கேட்டுக்கொள்கிறது.*

(I) ஏதேனும் விசேட மத்தியஸ்த பிரதேசத்தின், அதிகாரசபைக்கு நியமனம் பெறுவதற்கு உரிமையிருப்பது பின்வருவோருக்கு என்பதனால், அவர்களின் பெயர்கள் மாத்திரம் நியமனத்திற்காக பெயர் குறித்து நியமனம் செய்யப்பட வேண்டும். அவ்வாறாயின்,

(அ) விசேட மத்தியஸ்த சபைகளின் மத்தியஸ்தர்கள் குழாமொன்றின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு தகைமைகளைப் பெறுகின்ற ஆளொருவர் 35 வயதுக்கு மேற்பட்ட மற்றும் 70 வயதுக்குக் குறைந்த, மற்றும்

(ஆ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட தொழில் தகைமையுள்ள ஒருவர்,

(இ) அரசாங்க ஊழியர் ஒருவராக சேவையாற்றிய அல்லது சேவையாற்றிக் கொண்டிருக்கும் ஒருவர்.


1A - PG 3953 — 87 (2018/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(II) (அ) குறிப்பிடப்பட்ட ஒரு விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பின் குழாத்திற்குத் தனது சொந்தப் பெயர் நீங்கலாகப் பெயர் குறித்த நியமனங்களைச் செய்வதற்குப் பின்வரும் தனியாட்கள் உரித்துடையவர்களாவார்கள்.

(i) குறிப்பிட்ட அவ்விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பு எந்த நிர்வாக மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த நிர்வாக மாவட்டத்தினுள் இருக்கும் ஓர் அலுவலகத்தில் திணைக்களத் தலைவராக அல்லது உள்ளூர் திணைக்களத் தலைவராகச் சேவையாற்றும் ஓர் பகிரங்க அலுவலர் அல்லது மாகாணப் பகிரங்க அலுவலர்,

(ii) குறிப்பிட்ட அவ்விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பில் இருக்கும் ஒரு பாடசாலையின் அல்லது சமய வழிபாட்டுத் தலம் ஒன்றின் தலைவர்,

(iii) குறிப்பிட்ட அவ்விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பில் வசிக்கும் ஓய்வுபெற்ற ஒரு திணைக்களத் தலைவர் அல்லது ஓய்வுபெற்ற ஒரு பாடசாலைத் தலைவர்.

(ஆ) ஏதேனும் மத்தியஸ்த சபை இடப்பரப்பின் குழாத்திற்குப் பெயர் குறித்த நியமனங்களைச் செய்வதற்குப் பின்வரும் குழுக்கள், ஒழுங்கமைப்புக்கள், நிறுவனங்கள் உரித்துடையனவாகும்:-

(I) ஆகக் குறைந்தது ஐந்தாண்டுகளுக்காவது உளதாயிருந்துள்ளதும் கீழே கூறப்பட்ட குறிக்கோள்களுள் ஏதேனும் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை நிறைவேற்றுவதில் அல்லது அதற்கு அல்லது அவற்றுக்குச் சேவையாற்றுவதில் ஈடுபட்டுள்ளதுமான ஏதேனும் குழு, ஒழுங்கமைப்பு அல்லது நிறுவனம்,

(அ) சமூகத்தின் கல்வி, சமய, ஒழுக்க அல்லது ஆன்மீக முன்னேற்றத்திற்கான மேம்படுத்தல்,

(ஆ) சமூக நலன்புரி மற்றும் வறுமை நிவாரண மேம்படுத்தல்,

(இ) கிராமிய அல்லது சமுதாய அபிவிருத்தியை மேம்படுத்தல்,

(ஈ) பண்பாட்டையும் விளையாட்டுக்களையும் மேம்படுத்தல் ; அத்துடன்

(உ) சுகாதாரம், உணவு, வாழிடம் போன்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை ஏற்பாடு செய்து வழங்குவதற்கு கருதப்பட்ட கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்பாடுகளையும் மேம்படுத்தல்.

(இ) ஏதேனும் மத்தியஸ்த சபை பிரதேசத்தில் நியமிப்பதற்காக பெயர் குறித்த நியமனங்களை சமர்ப்பிப்பதற்கு மாவட்டச் செயலாளருக்கு/பிரதேச செயலாளருக்கு உரிமையுண்டு.

(II) அவ்விசேட மத்தியஸ்த சபை எந்த நிர்வாக மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த நிர்வாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளருக்கு.

03. (அ) மேலே (2) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தனியாட்கள், சபைகள், ஒழுங்கமைப்புக்கள், நிறுவனங்கள் என்பனவற்றினால் (2) (அ) ஆம், (2) (ஆ) ஆம் பந்திகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள பகிரங்க அலுவலர்களின் பெயர்களைச் சமர்ப்பித்தல் முடியாது எனினும், மாகாண சபை, அரசாங்க அலுவலர்களின் பெயர்களை அவர்கள் சமர்ப்பிக்கலாம். தனியாள் ஒருவர் தன்னைத்தானே பெயர் குறித்து நியமிக்க உரித்துடையவரல்லர்.

(ஆ) மேலுள்ள பந்தி (2) (இ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அரசாங்க அதிபர்கள், பகிரங்க அலுவலர்களின் பெயர் குறித்த நியமனங்களைச் சமர்ப்பிக்கலாம். இவர்களுள் ஐந்திற்கு மேற்படாதவர்களை இயைபான மத்தியஸ்தர்கள் குழாத்திற்கு ஆணைக்குழு நியமிக்கலாம்.

04. பெயர் குறித்த நியமனங்கள் செய்யும் படிவம் -

(அ) தனியாட்கள் பொருளளவில் கீழேயுள்ள படிவம் 'அ' இல் பெயர் குறித்த நியமனங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்,

(ஆ) குழுக்கள், ஒழுங்கமைப்புக்கள், நிறுவனங்கள் என்பன பொருளவில் கீழேயுள்ள படிவம் 'ஆ' இல் பெயர் குறித்த நியமனங்களைச் செய்யவேண்டும்,

(இ) மாவட்டச் செயலாளர்/ பிரதேச செயலாளர்கள் பொருளளவில் கீழேயுள்ள படிவம் 'இ' இல் பெயர் குறித்த நியமனங்களைச் செய்யவேண்டும்.

ஒவ்வொரு பெயர் குறித்த நியமனமும் வெவ்வேறு படிவத்தில் இருக்க வேண்டுமென்பதுடன் அடுத்த பந்தியில் காட்டப்பட்டவாறு பெயர் குறித்த நியமனங்களின் விதப்புரையையும் அது தவறாது கொண்டிருத்தல் வேண்டும்.

05. பெயர் குறித்து நியமிப்பவரின் விதப்புரை காரணங்கள் இல்லாத வெறும் விதப்புரையாக இருத்தலாகாது. மத்தியஸ்தர் குழாத்திற்கு நியமிக்கப்படுவதற்காகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆளின் தகுதி அல்லது வேறு விடயங்கள், உதாரணமாக அவர்களுடைய தற்போதைய அல்லது கடந்தகாலத் தொழில், சேவையாற்றிய அல்லது ஈடுபட்டிருந்த காலப்பகுதி, அவரால் வகிக்கப்பட்ட ஏதேனும் நம்பிக்கை அல்லது பொறுப்புநிலை அத்துடன் ஏதேனும் சமூகசேவை/ சமய/ தர்மஒழுங்கமைப்பில், சங்கத்தில் அல்லது குழுவில் அவரால் வகிக்கப்பட்ட ஏதேனும் பதவி குறித்து ஆணைக்குழு அதன் சொந்த ஊகிப்புக்களை பெறுவதற்கேதுவாக குறித்த நிகழ்வுகளையும், சூழ்நிலைகளையும் அது குறிப்பிட வேண்டும்.

06. அதே மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கு மேற்பட்ட குறித்த நியமனங்களைச் செய்வதைக் கூடிய வரையில் ஒரு தனியார் அல்லது ஒரு குழு, ஒழுங்கமைப்பு அல்லது நிறுவனம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். என்றாலும், தற்போதிருக்கும் மத்தியஸ்த குழாத்துத் தவிசாளருக்கும் மாவட்டச் செயலாளர்/ பிரதேச செயலாளருக்கும் இவ்வெல்லை ஏற்புடையதாகாது.

07. பெயர் குறித்த நியமனங்கள் அனைத்தும் 2018, ஏப்பிறல் 30 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன் "செயலாளர், மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, இல. 80, நீதிமன்றவீதி, கொழும்பு 12" என்ற விலாசத்திற்கு அனுப்பப்படுதல் வேணடும்.

08. ஆணைக்குழுவானது தொடக்கத்தில் அதன் நோக்கப்படி தகுதியானவர்கள் எனக்கருதும் தகவுடைய ஆட்களை மத்தியஸ்த திறமைகள் அத்துடன் தொழில்நுட்பங்கள் சம்பந்தமான ஓர் ஆரம்பப் பயிற்சி நெறிக்குத் தெரிவுசெய்யும்.

09. இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்படாத ஏற்பாடுகள் எதுவாயினும் அது தொடர்பில் தீர்மானங்களில் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

ராஜனி அத்தப்பத்து,
செயலாளர்,
மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு.

மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு அலுவலகம்,
இல. 80, நீதிமன்ற வீதி,
கொழும்பு 12,
2018, மாச்சு 19.

**படிவம் "அ"**

(பெயர் குறித்த நியமங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தகவுடைய தனியாட்களால் நிரப்பப்பட வேண்டியது.)

1. விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பு :.......................................................

2. நிர்வாக மாவட்டம் :.......................................................................

3. பெயர் குறித்த நியமனத்தைச் சமர்ப்பிக்கும் தனியாட்களின் விபரங்கள் :-

(அ) முழுப் பெயர் :...............................................................
(ஆ) வதிவிட தபால் முகவரி :.....................................................
(இ) பெயர் குறித்த நியமனத்தைச் சமர்ப்பிப்பதற்கான உமது தகைமை: ...........

(I) நீர் ஓர் திணைக்களத் தலைவரா? அவ்வாறாயின், கீழுள்ள தகவல்களை வழங்கவும் :-

திணைக்களத்தின் பெயர் :..................................................
அலுவலக முகவரி :.........................................................
நீர் வகிக்கும் பதவி :...................................................................

(II) நீர் ஒரு வணக்கத் தலத்தின் தலைவரா அல்லது உள்ளூர் திணைக்களத் தலைவரா அல்லது பாடசாலைத் தலைவரா? அவ்வாறாயின், கீழுள்ள தகவல்களை வழங்கவும் :-

அதன் பெயர் :.........................................................
அதன் முகவரி :.....................................................
நீர் வகிக்கும் பதவி :...................................................................

(III) நீர் ஓர் ஓய்வுபெற்ற திணைக்களத் தலைவரா அல்லது ஓய்வுபெற்ற பாடசாலைத் தலைவரா? அவ்வாறாயின், கீழுள்ள தகவல்களை வழங்கவும் :-

நிறுவனத்தின் பெயர் :.........................................................
கடைசியாக வகித்த பதவி :.............................................
நீர் வசிக்கும் விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பு (மாவட்டம்) :..........

4. உம்மால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆளின் விபரங்கள் :-

(அ) அவருடைய முழுப் பெயர் :.....................................................

(ஆ) அவருடைய முகவரி :...........................................................

(இ) பிறந்த திகதி :...................................................................

(ஈ) தேசிய அடையாள அட்டை இல. :.................................................

(உ) தொலைபேசி இல. :..................................................................

(ஊ) மேற்குறிப்பிட்ட விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பில் அவர் வசிப்பவரா அல்லது விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கு வெளியில் வசிப்பவரா :...........

(எ) இவ்விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பினுள் அவர் ஏதேனும் வேலையில் ஈடுபட்டுள்ளாரா அல்லது பிரதேசத்திற்கு வெளியில் தொழில் செய்பவரா :...........

(ஐ) உமது விதப்புரையை அதற்கான காரணங்களுடன் தருக :.........................
.....................................................................................................................

----,
கையொப்பம்.
(இலச்சினை இருப்பின்)

திகதி:....................

## படிவம் "ஆ"

(பெயர் குறித்த நியமனங்களைச் செய்வதற்குத் தகவுடைய குழுவின், ஒழுங்கமைப்பின், நிறுவனத்தின் செயலாளரால் நிரப்பப்பட வேண்டியது.)

1. விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பு :......................................................

2. நிர்வாக மாவட்டம் :......................................................................

3. பெயர் குறித்த நியமனத்தைச் சமர்ப்பிக்கும் குழுவின், ஒழுங்கமைப்பின் அல்லது நிறுவனத்தின் விபரங்கள் :-

(அ) அதன் பெயர் :..................................................................

(ஆ) அதன் பதிவு/ அலுவலக விலாசம் :...................................................

(இ) அது பதிவு செய்யப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட திகதி :..........................

(ஈ) அது உளதாயிருக்கும் காலம் :……………………………………………………

(உ) அது நிறைவேற்ற அல்லது சேவையாற்ற ஈடுபட்டுள்ள நோக்கங்கள் :…………
…………………………………………………………………………………

4. பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆளின் விபரங்கள் :-

(அ) அவருடைய முழுப் பெயர் :…………………………………………………………

(ஆ) அவருடைய விதிவிட தபால் முகவரி :……………………………………………

(இ) பிறந்த திகதி :…………………………………………………………...…

(ஈ) தேசிய அடையாள அட்டை இல. :…………………………………………………

(உ) தொலைபேசி இல. :…………………………………………………………………

(ஊ) மேற்குறிப்பிட்ட விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பில் அவர் வசிப்பவரா? இல்லையெனில், விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கு வெளியில் வசிப்பவரா ?
…………………………………………………………………………………

(எ) தொழில் தகைமை :…………………………………………………………………

(ஏ) இவ்விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பினுள் அவர் ஏதேனும் வேலையில் ஈடுபட்டுள்ளாரா? அப் பிரதேசத்திற்கு வெளியில் தொழில் செய்பவரா ? :…………

(ஐ) உமது விதப்புரையை அதற்கான காரணங்களுடன் தருக :…………………
………………………………………………………………………………

5. அவருடைய பெயர் குறித்த நியமனத்திற்கு அதிகாரமளிக்கும் தீர்மானமொன்றைக் குழு, ஒழுங்கமைப்பு அல்லது நிறுவனம் நிறைவேற்றியுள்ளதா? அவ்வாறாயின், அத்தீர்மானத் திகதி :……………………………………………………………….

6. குழு, ஒழுங்கமைப்பு அல்லது நிறுவனத்தின் விதப்புரையை அதற்கான காரணங்களுடன் தருக :……………………
…………………………………………………………………………

…………………
செயலாளரின் கையொப்பம்.
(சபை, அமைப்பு அல்லது நிறுவனத்தின் இலச்சினை)

திகதி :…………………………

**படிவம் "இ"**

(பெயர் குறித்த நியமனங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தகவுடைய அரசாங்க அதிபரால் நிரப்பப்பட வேண்டியது)

1. விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பு :…………………………………………………

2. நிர்வாக மாவட்டம் :…………………………………………………………………

3. பெயர் குறித்த நியமனத்தைச் சமர்ப்பிக்கும் அரசாங்க அதிபரின் விபரங்கள் :-

(அ) உமது முழுப்பெயர் :……………………………………………………………….

(ஆ) உமது அலுவலக விலாசம் :…………………………………………………….

(இ) நீர் அரசாங்க அதிபராயிருக்கும் நிர்வாக மாவட்டம் :…………………………

*4.* பெயர் குறித்து நியமிக்கப்படும் அலுவலரின் விபரங்கள் :-

(அ) அவருடைய முழுப் பெயர் :.........................................................

(ஆ) அவருடைய வதிவிடத் தபால் முகவரி :.................................................

(இ) பிறந்த திகதி:.........................................................................

(ஈ) தேசிய அடையாள அட்டை இல. :...................................................

(உ) தொலைபேசி இல. :..................................................................

(ஊ) மேற்குறிப்பிட்ட விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பில் அவர் வசிப்பவரா? இல்லையெனில், விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கு வெளியில் வசிப்பவரா ?..........................................................................................

(எ) தொழில் தகைமை :..................................................................

(ஏ) இவ்விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பினுள் அவர் ஏதேனும் வேலையில் ஈடுபட்டுள்ளரா? அப்பிரதேசத்திற்கு வெளியில் தொழில் செய்பவரா ?............

(ஐ) உமது விதப்புரையை அதற்கான காரணங்களுடன் தருக :........................
..........................................................................................

-------------------,
கையொப்பம்.
(இலச்சினை)

திகதி :................................

*04-96*